# முதுகலை இரண்டாமாண்டு தமிழ் இலக்கியம்

## இலக்கண மரபு 18MTA42C

முனைவர் ப. ரமேஷ்

# பாடத்திட்டம்

- கூறு: I இலக்கண வரலாறு
  - 1. தமிழ் இலக்கணங்களின் வரலாறு அறிமுகம்
  - 2.இலக்கண உருவாக்கம் தொல்காப்பியம்- வீரசோழியம் – நன்னூல்

# கூறு: I இலக்கண வரலாறு

- I. தமிழ் இலக்கணங்களின் வரலாறு அறிமுகம்

# தமிழ் இலக்கணங்களின் வரலாறு -அறிமுகம்

- இலக்கணம் – சொல்லாராய்ச்சி
- தொல்காப்பியத்தில்
  - “புறத்திணை இலக்கணம்” (1002)
  - “இழைபின் இலக்கணம்” (1498)
  - “செய்யுள் மருங்கின் மெய்பெற நாடி இழைத்த இலக்கணம்” (1499)
  - இலக்கணம் – இலக்கு+ அண் + அம்
  - இலக்கு – குறி
  - அண் – அண்ணுதல் (நெருங்குதல்)
  - அம் – பெருமைப் பொருள் ஈறு

# இலக்கணம் – சொல்லாராய்ச்சி

- "இலக்கு – இலக்கணம் சிறந்த நடைக்கு எடுத்துக்காட்டாக அல்லது கற்றோர் பின்பற்றும் இலக்காக, கூறப்பெறும் மொழியமைதி (Grammer) பாவாணர்
- வடமொழியில் குறி, குறிக்கோள், இயல், இயல்விளக்கம்(Definition) விளக்கக்காட்டு (Illustration) என்னும் பொருள்களிலேயே லக்ஷண என்னும் சொல்லை பயன்படுத்துகின்றனர்

- வடமொழியில் இலக்கணத்தை வியாகரணம், சப்த சாஸ்திரம் என்பர்
- இலக்கணம் என்னும் சொல், லக்ஷணம் என்னும் வடமொழிச் சொல்லின் சிதைவு என்பது தவறு.
- லக்ஷ என்னும் சொல் “லக்” என்பதற்கு மூலமாக காட்ட முயல்வது பொருந்தாது.

- குறி: குறி என்பது இலக்கணம் என்னும் பொருள் தருகிறது. இலக்கணம் அறிந்தோர் குறியறிந்தோர் எனப்பட்டனர்
  - "உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலனெனக் கொள்ளும் என்ப குறியறிந் தோரே" (தொல்.அகம்.993)
- நூல்: நூல் என்பது பழநாளில் இலக்கணத்தைக் குறித்தது.
- நூல் என்னும் பெயரில் நாடகத்தமிழ் நூல் ஒன்று இருந்தது – அடியார்க்கு நல்லார் (சிலம்பு – உரைப்பாயிரம்)

- எ.கா. : குணநூல், கூத்தநூல், மதிவாணர் நாடகத்தமிழ் நூல், நன்னூல், சின்னூல், தொன்னூல் விளக்கம்,
- நூல் யாத்தற்குரிய பாவே "நூற்பா"
- இலக்கணப் புலவர் "நூல் நவில் புலவர்" எனப்பட்டனர் (தொல் 1411)
- அடிவரையறை இல்லாத செய்யுள்களைக் கொண்டது "நூலினான" (தொல்.1421)
- "அவற்றுள் நூலெனப் படுவது நுவலுங்காலை"(தொல் 1422)

- நூற்பா – நூற்பா அகவல் திவாகரர்
- "நூற்பா அகவல் நுணங்க நாடில்

சூத்திரங் குறித்த யாப்பிற் றாகி
அடிவரை யின்றி விழுமிதின் நடக்கும்"
நூல்  என்பது இடுகுறியால் பெற்ற
பெயர் – இறையனார் களவியலுரை,
நன்னூல் மயிலை நாதருரை
"இடுகுறியால் பெயர் பெற்றன நிகண்டு,
நூல்,கலைக்கோட்டுத் தண்டு – (கள.I)
(நன்னூல்48)

- புலன் – என்பதும் இலக்கணம் என்னும் பொருளைக் குறிக்கும்

“திணைமயக் குறுதலும் கடிநிலை யிலவே
நிலனொருங்கு மயங்குதல் இல்லென மொழிப
புலன்நன் குணர்ந்த புலமை யோரே”
(தொல்.958)

“தெரிந்த மொழியாற் செவ்விதிற் கிளந்து
தேர்தல் வேண்டாது குறித்த்து தோன்றிற்
புலனென மொழிப புலனுணர்ந் தோரே” – தொல் (1497)

புலம் என்பது இலக்கணங்களை - நச்சினார்க்கினியர்

# எழுத்து, இயல்பு, முறை, மரபு

- எழுத்து – இலக்கணம் குறிக்கும் சொல்
- எண்ணென்ப ஏனை எழுத்தென்ப -392 பரிமேலழகர் உரை
- இயல்பு – இயல்பென மொழிப இயல்புணர்ந்தோரே – (தொல்950)
- முறை –

"இறையும் கேள்வி யிலாதவென் புன்கவி முறையில் நூலுணர்ந் தோரும் முனிவரோ" – கம்பர் அவையடக்கப்பாடல்

"முக்காற் கேட்பின் முறையறிந் துரைக்கும்" – நன்னூல்

மரபு – மரபு எனினும் இலக்கணம் எனினும் எல்லாம் ஒரு பொருட் பன்மொழி – (களவியல்3)

# வரலாறு

- வரலாறு என்பது வரும் வழி.. வரும் முறை என்னும் பொருளது.
- ஆறு வரும் வழி – யாறு வரலாறு – பரிபாடல் (6.42)
- வரலாறு – வரன்முறை (எழுத்.137) வரலாற்று முறைமை – இளம்பூரணர்
- வரலாற்று வகைகள் மிகப்பல
- அரசன், இனம், பண்பாடு,மொழி. இலக்கியம், இலக்கணம்

- மொழி வரலாறு. மொழிவரலாற்றின் ஒரு சிறப்புக் கூறு இலக்கண வரலாறு
- மற்றொரு சிறப்புக்கூறு இலக்கிய வரலாறு
- இலக்கிய வரலாறு முன்னது விரிவானது
- இலக்கண வரலாறு பின்னது – அளவால் சுருங்கியது
- "இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பல்"

- “இலக்கியம் இன்றி இலக்கணம் இன்றே எள்ளின் றாகில் எண்ணெயும் இன்றே எள்ளினின் றெண்ணெய் எடுப்பது போல இலக்கியத் தினின்றும் எடுபடும் இலக்கணம்”

எள் – எண்ணெய் போன்ற தெளிவானது

கோழி – முட்டை போன்றது அல்ல

இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பயது ஒரு நிலை

இலக்கணம் கண்டு இலக்கியம் படைத்தல் ஒரு நிலை

இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்புதலே இயற்கை முறை, வளர்ச்சி முறை

இலக்கணம் கண்டு இலக்கியம் படைத்தல் – கூறியது கூறல் மிகுந்த்து.

# தமிழ் இலக்கணம்

- மூன்றுவகை பாடுபாடுகள்
- இயற்றமிழ்,
- இசைத்தமிழ்,
- நாடகத்தமிழ்
- அகத்தியம் முத்தமிழுக்கும் உரிய இலக்கண நூல் – ஆனால் கிடைக்கவில்லை

# இயற்றமிழ் இலக்கணம்

- செய்யுளும் உரைநடையும் – இயற்றமிழ்
- இலக்கியமும் இலக்கணமும் அடங்கும்
- செந்தமிழால் இன்ற செய்யுள்களும் உரைநடையும், கொடுந்தமிழால் அமைந்த செய்யுள்களும் உரைநடையும் இயற்றமிழ்

# இலக்கணப் பிரிவு

- எழுத்து, சொல், பொருள் –மூன்று தொல்காப்பியர்
- பொருளதிகாரம் – பொருள், உவமை, யாப்பு
- பொருளிலக்கணம், அணியிலக்கணம், யாப்பிலக்கணம் என மொத்தம் ஐந்திலக்கணம்
- பொருள் – அகப்பொருள் – புறப்பொருள் என ஆறு இலக்கணம்
- செய்யுள் - செய்யுளிலக்கணம், பாட்டியலிலக்கணம் என பகுத்து ஏழு இலக்கணம் என்றும் கொள்ளலாம்.

# ஐந்திலக்கண நூல்கள்

- தொல்காப்பியம், வீரசோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்து வீரியம், சாமிநாதம்
- தொல்காப்பியத்தை ஐந்திலக்கணம் எனக் கூறுதல் மரபன்று
- வீரசோழியம் – பொருளை அகப்பொருள், புறப்பொருள்

- இலக்கண விளக்கம் – அகப்பொருள், புறப்பொருள், பாட்டியல்
- தொன்னூல் விளக்கம், முத்துவீரியம் – பாட்டியல் இலக்கணமும் கூறுகின்றன.
- சாமிநாதம் – முழுதும் கிடைக்கவில்லை
- தமிழ் நெறி விளக்கம் – அகப்பொருள் மட்டும் கிடைத்துள்ளது.
- நன்னூலும்ஐந்திலக்கண நூல் என்பர்
- தண்டபாணி சுவாமிகள் இயற்றிய நூல் ஐந்திலக்கணம் உணர்த்துவது

# எழுத்தும் சொல்லும்

- தொல்காப்பியர் எழுத்தும் சொல்லும் ஆய்ந்தார்
- பொருளும் ஆய்ந்தார்.
- கி.பி. 12 ஆம் நூற்றாண்டு எழுத்தும் சொல்லும் – நேமிநாதம்
- நன்னூல் 13 ஆம் நூற்றாண்டு
- எழுத்தும் சொல்லும் நிலைத்தன.

- சொல்லிலக்கணமே இலக்கணம் எனக் கருதினார் வடமொழிவாணர்கள்.
- சொல்லிலக்கணத்தை வியாகரணம்
- வீரசோழியம் நேமிநாதம் நன்னூல் ஆகியவை சொல்லிலக்கதையே பெரிதும் ஆராய்ந்தன.
- கிபி 17 ஆம் நூ. பிரயோக விவேகமும் இலக்கணக் கொத்தும் சொல்லிலக்கணம் பற்றி விவரிவாக விளக்கின.

- எழுத்தும் சொல்லும் உணர்த்தும் நூல்கள்
- தொல்காப்பியம்,
- வீரசோழியம்,
- நேமிநாதம்,
- நன்னூல்.
- இலக்கண விளக்கம்.
- தொன்னூல் விளக்கம், முத்துவீரியம்.
- சாமிநாதம் என்பன.

# அகப்பொருள் இலக்கணம்

- பொருளதிகாரம் கிடைக்காததால் எழுந்த இலக்கண நூல் இறையனார் களவியல்
- எழுத்தும் சொல்லும் கிடைத்தன பொருள் கிடைக்கவில்லை

- அகப்பொருள் இலக்கணம்
- தொல்காப்பியம், இறையனார் களவியல், தமிழ்நெறி விளக்கம், வீரசோழியம், நம்பியகப்பொருள், களவியற்காரிகை, மாறனகப்பொருள், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்து விரியம், சாமிநாதம்
- திருக்கோவையார், பழனிக்கோவை

# புறப்பொருள் இலக்கணம்

- தொல்காப்பிய புறத்திணையியல்
- பன்னிரு படலம்
- புறப்பொருள் வெண்பாமாலை – சிறப்பான புறப்பொருள் நூல்(கிபி.8)
- வீர சோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம் ஆகிய ஓரளவு புறப்பொருளைப் பற்றிய இலக்கணம் கூறுகின்றன.

# 5யாப்பிலக்கணம்

- தொல்காப்பியம், யாப்பருங்கலம், காரிகை, வீரசோழியம்,
- பா வகைகளுக்கு எடுத்துக்காட்டு தரும் நூல்கள் - பாப்பாவினம், சிதம்பரச் செய்யுட்கோவை, சிதம்பரப் பாட்டியல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம்,முத்துவீரியம், திருவலிங்கற்றிரட்டு,
- பல்சந்தப்பரிமளம், விருத்தப்பாவியல், 18நூ. வசனநடை
- வண்ணத்தியல்பு –வண்ணங்களின் இலக்கணம் -19நூ தண்டபாணி சுவாமிகள்

# 6அணியிலக்கணம்

- தொல்காப்பிம்,
- வீரசோழியம் 35அணிகள்,
- தண்டியலங்காரம் 35அணிகள்,
- மாறனலங்காரம் 64 அணிகள் ,
- இலக்கண விளக்கம்,
- தொன்னூல் விளக்கம்.
- மூத்துவீரியம் 58 அணிகள்,
- வடமொழி சந்திராலோகம் 100,
- அதன் உரை -குவலயானந்தம் 100 அணிகள்

# 7.பாட்டியல்

- பன்னிரு பாட்டியல்,
- வெண்பாப் பாட்டியல்,
- நவநீதப் பாட்டியல்,
- சிதம்பரப் பாட்டியல்,
- வரையறுத்த பாட்டியல்,
- முத்துவீரியம், தொன்னூல் விளக்கம் பாட்டியல் உள்ளது
- பிரபந்த தீபிகை
- வாருணப் பாட்டியல், தத்தாத்ரிரேயப் பாட்டியல், மாமூலர் பாட்டியல், பாட்டியல் மரபு, பிரபந்ததீபம், பிரபந்தத் திரட்டு